# SydWest
## Multicultural Services

Disability Services
(ஊனமுற்றோருக்கான
சேவைகள்)

கலாச்சாரங்களை இணைத்தல். சமூகத்தைக் கட்டமைத்தல்.

**NDIS** சேவைகள்

**ஊனமுற்றோர்**
வேலைவாய்ப்புச்
**சேவைகள்**

**கலாச்சார ரீதியாக**
திறமையான
**ஆதரவு ஊழியர்கள்**

**தரகுச்**
சேவைகள்

**இருமொழி**
**பேசும்**
பணியாளர்கள்

Tamil | தமிழ்

**SydWest Multicultural Services** என்பது ஒரு முன்னணி சமூக அமைப்பாகும். பலவகையாய் வேறுபட்ட சமுதாயத்தினரின் சமூகத் திறனை கட்டமைப்பதில் பங்களிப்பதே எங்கள் குறிக்கோள். தனிநபரை மையமாகக் கொண்ட நேரடிச் சேவைகளை வழங்குவதன் மூலம் அனைத்து கலாச்சாரங்களின் தனிநபர்களையும் ஆளுமைப்படுத்த நாங்கள் முயற்சி செய்கிறோம். பாதிப்புக்கு ஆளாகக்கூடியவர்கள் மற்றும் தங்களுடைய வாழ்க்கைப் பாதையில் அதிகமாக தேவை உள்ளவர்கள் மீது நாங்கள் கவனம் செலுத்துகிறோம்.

## SydWest Multicultural Services – ஐ ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்?

எங்களது பணியாளர்கள் உங்கள் மொழியைப் பேசுவார்கள். அத்துடன் உங்கள் அன்றாட வாழ்க்கையில் நீங்கள் சுதந்திரமாக வாழ்வதற்கும், உங்கள் வாழ்க்கையின் இலட்சியங்களை அடைவதற்கும் அவர்களால் உங்களுக்கு உதவி செய்ய முடியும். நீங்கள் பெறுகின்ற ஆதரவு உங்கள் கட்டுப்பாட்டிலும், உங்கள் விருப்பத்தின் பேரிலும் இருப்பதை உறுதி செய்யும் வகையில் நாங்கள் உங்களுடன் பணியாற்றுகிறோம். நீங்கள் உங்களுக்காக அதிகமான காரியங்களைச் செய்வதற்கும், சமூகத்தில் ஒரு பங்காக இருப்பதற்கும் தேவையான திறன்களைப் பெற நாங்கள் உதவுகிறோம்.



## NDIS Services (NDIS சேவைகள்)

SydWest Multicultural Services என்பது NDIS (தேசிய ஊனமுற்றோர் காப்பீட்டுத் திட்டம்) -இல் பதிவு செய்யப்பட்ட சேவை வழங்குநராகும். அத்துடன் NDIS சேவைகளை அணுக CALD (கலாச்சார மற்றும் மொழியியல் ரீதியாக வேறுபட்ட) சமூகங்களுக்கு உதவுகிறது. உங்களது அனைத்து NDIS உதவித் தேவைகளுக்கும் எங்களது அனுபவம் வாய்ந்த, இருமொழியில் பேசக்கூடிய ஊழியர்களைத் தொடர்பு கொள்ளவும்.

### சேவைகளில் பின்வருபவை அடங்கும்:

- ஆதரவு ஒருங்கிணைப்பு
- இணக்கமான, தனித்தன்மையான, வீட்டுக்குள் வழங்கப்படும் சேவைகள்
- சமூகத்தை அணுகல், பொழுதுபோக்கு மற்றும் சமூக ஆதரவுகள்
- குழு அடிப்படையிலான நடவடிக்கைகள்
- சுயாதீனமாக வாழ ஆதரவளிக்கும் சேவைகள்.

பிராந்தியத்தில் சமூக நல்லிணக்கத்தையும், ஒருங்கிணைப்பையும் மேம்படுத்துவதற்கும், சமூகத் திறனைக் கட்டமைக்கவும் நாங்கள் தனிநபர்கள் மற்றும் சமூகக் குழுக்களுடன் வேலை செய்வதுடன், மற்றவர்களுடனும் சேர்ந்துழைக்கின்றோம்.



# விழுமியங்கள்

உத்தரவாதம், ஒத்துழைப்பு, மேன்மை

## Community Connections Program (சமூக இணைப்புகள் நிகழ்ச்சித் திட்டம்)

### சமூக இணைப்புகள் நிகழ்ச்சித் திட்டமானது எவ்வாறு உங்களுக்கு உதவ முடியும்?

- உள்ளூர் சமூகங்களுக்குள்ளே NDIS நிதியுதவி அளிக்காத ஆதரவுகளைக் கிடைக்கச் செய்வதில் ஊனமுற்றோருக்கு உதவிபுரிதல்
- ஊனமுற்றோரை முதன்மையான சேவைகள் மற்றும் செயல்பாடுகளில் இணைப்பதில் உதவிபுரிதல்
- தகவலறிந்து தெரிவுகளைச் செய்யும் வகையில் பங்கேற்பாளர்களுக்குப் பொருத்தமான மற்றும் புதுப்பிக்கப்பட்ட தகவல்களைக் கண்டறிய உதவிபுரிதல்
- தங்கள் சமூகங்களுக்குள்ளே பங்கேற்பாளர்களை ஆதரவுகளுடன் இணைக்கவும், திறன்கள் மற்றும் ஆற்றலை உருவாக்கவும் உதவி புரிதல்
- ஊனங்களுடன் வாழ்கின்றவர்க்கு அதிகாரமளித்தல்

அனைத்துப் பரிந்துரைகளுக்கும்:
**intake.ilc@sydwestms.org.au**

எங்களது பணியாளர்கள் உங்கள் மொழியைப் பேசுவார்கள். அத்துடன் உங்கள் அன்றாட வாழ்க்கையில் நீங்கள் சுதந்திரமாக வாழ்வதற்கும், உங்கள் வாழ்க்கையின் இலட்சியங்களை அடைவதற்கும் அவர்களால் உங்களுக்கு உதவி செய்ய முடியும்.

## Disability Employment Services (ஊனமுற்றோர் வேலைவாய்ப்புச் சேவைகள்)

Disability Employment Services (DES, ஊனமுற்றோர் வேலைவாய்ப்புச் சேவைகள்) என்பது ஆஸ்திரேலிய அரசின் வேலைவாய்ப்புச் சேவையாகும். இது ஊனமுள்ள, காயமுற்ற அல்லது உடல் நலமில்லாத மக்களுக்கு வேலை தேடிக் கொடுத்து, அதில் நிலைத்திருக்க உதவுகிறது.

DES என்பது ஊனமுள்ள, காயமுற்ற அல்லது உடல் நலமில்லாத மக்களுக்கு வேலை தேடிக் கொடுத்து அதில் நிலைத்திருக்க உதவும் ஒரு இலவச சேவையாகும்.

### DES உங்களுக்கு எவ்வாறு உதவ முடியும்?

- உங்கள் வேலைத் திறனுக்கு ஏற்றபடி வேலை உள்ளதா எனப் பணிப்பொருத்தம் பார்த்தல்
- வேலைக்கான விண்ணப்பங்கள் எழுதுவதில் உதவுதல்
- தற்குறிப்புகள் (resumes) தயாரிப்பதில் உதவுதல்
- உங்கள் விருப்பங்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட சேவைகள்
- வேலை தருவோர்களிடம் விவரங்களைக் கொண்டுபோய்ச் சேர்த்தல்
- வேலைவாய்ப்புக்கான தடைகளை நீக்குதல்
- ஊதிய மானியத்தில் ஆதரவளித்தல்
- பயிற்சி மற்றும் வேலை அனுபவம் போன்றவற்றை வழங்கி, வேலை வாய்ப்பு கிடைப்பதில் உங்களுக்கு உதவிபுரிதல்
- உங்களுக்குத் தேவைப்படும் வரை பணிபுரியும் இடத்தில் ஆதரவை வழங்குதல்







**SydWest**
**Multicultural Services**

## NDIS Brokerage Services
## (NDIS தரகுச் சேவைகள்)

சேவை வழங்குநர்கள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு வீட்டிலும், வீட்டுக்கு வெளியிலும் கலாச்சார ரீதியில் திறமையான பராமரிப்பைப் பெறுவதில் உதவிட தரகுச் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

**எங்களது கலாச்சார ரீதியில் திறமையான குழுவினால் பல்வேறு மொழிகளைப் பேசமுடியும். அத்துடன் உங்கள் கலாச்சாரத்தையும் புரிந்து கொள்ளமுடியும்.**

SydWest Multicultural Services என்பது ஒரு பதிவு செய்யப்பட்ட NDIS வழங்குநராகும். இது ஊனமுற்றோர், அவர்களது குடும்பங்கள் மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்களுக்குத் தரமான ஆதரவை வழங்குகிறது.

- அராபிக்
- ஆங்கிலம்
- இத்தாலியன்
- இந்தி
- உக்ரேனியன்
- கான்டோனீஸ்
- கிரீக்
- குரோஷியன்
- கொரியன்
- செக்
- செர்பியன்
- டகலாக்*
- டர்கிஷ்
- டிங்கா
- தமிழ்
- பஞ்சாபி
- பிரெஞ்சு
- பெர்ஷியன் (ஃபார்ஸி/டாரி)
- போலிஷ்
- போஸ்னியன்
- மாசிடோனியன்
- மாடி
- மாண்டரின்
- மால்டிஸ்
- ரஷியன்
- ஸ்பானிஷ்
- ஷோனா

*அத்துடன் சிறு எண்ணிக்கையிலான ஃபிலிப்பினோ வட்டார மொழி

# எங்களைத் தொடர்பு கொள்ள


**பிளாக் டவுன் அலுவலகம்**
Level 2
125 Main Street
Blacktown NSW 2148
**தொலைபேசி:**
02 9621 6633
**தொலைநகல்:**
02 9831 5625

**மவுண்ட்ரூயிட் அலுவலகம்**
Shop 3
6-10 Mount Street
Mt Druitt NSW 2770
**தொலைபேசி:**
02 9625 0455
**தொலைநகல்:**
02 9625 0322

**பென்ரித் அலுவலகம்**
Community Connection Building, Suite 113
114-116 Henry Street
Penrith NSW 2750
**தொலைபேசி:**
02 9621 6633

**ரௌஸ் ஹில் அலுவலகம்**
Vinegar Hill Community Centre
Ground Floor
29 Main Street
Rouse Hill NSW 2155
**தொலைபேசி:**
02 9621 6633

**www.sydwestms.org.au** **info@sydwestms.org.au**

முகநூலில் எங்களைக் கண்டறிக